# வெள்ளை நிறம்.




வெள்ளை நிறத்துடன் பரிமுகனாய் அவதரித்தவனே ,

கொள்ளைகொண்டாய் இன்று அடியேன் மனதினையே!

வெள்ளை நிறத்துடன்....

நாசிக்காற்றிலிருந்து வேதங்களைத் தோற்றுவித்து ,

நான்முகனுக்கு அவையாவையும் கற்று தந்தவனே;

கேசியென்ற அரக்கனைக் கொன்று அவனிடமிருந்து ,

நான்கு வேதங்களையும் மீண்டும் கொணர்ந்தவனே!

வெள்ளை நிறத்துடன்......

தேசிகனுக்கு அருள்புரிந்திட வேண்டி நேரில் தோன்றி ,

பாங்குடன் நின்வாய் அமுதத்தைத் தந்தவனே உனை;

நேசிக்கும் உன்னடியவர்களுக்கு நேர்ந்திடும்அனைத்து ,

தீங்குகளையும் நீக்கியின்று அருள் புரிந்திட வந்தவனே!

வெள்ளை நிறத்துடன்.......